செய்தி வெளியீடு எண்:305 நாள் : 22.06.2016

**மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில் இன்று ( 22.06.2016) சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை கங்கை திருப்பயணம் நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் ஆற்றிய உரை**

வான்புகழ் வள்ளுவர் திருவுருவச்சிலையை கங்கை கரையோரம் நிறுவிடும் முகத்தான் கன்னியாகுமரியிலிருந்து கொண்டுச் செல்லப்படும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு செய்த 'ஈதல் இசைப்பட வாழ்தல்' என்பதற்கு இலக்கணமாகத் திகழும் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களை முதற்கண் சமர்ப்பிக்கிறேன்.

திருக்குறளை சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு ரூ.98 லட்சமும், பாரதியார் பாடல்கள் மற்றும் பாரதிதாசன் பாடல்களை சீன மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு ரூ.72 லட்சமும், ஆத்திச்சூடியை சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு ரூ.15 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து, திருக்குறள், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஆத்திச்சூடியை உலக நாடுகளுக்கு வழங்கித் தமிழின் பெருமையை, உலகமெலாம் உணரவைத்துக் கொண்டிருக்கின்ற பெருமை **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களையே சாரும்.

திருவள்ளுவருக்கு பெருமை சேர்ப்பதில் **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு** நிகர் எவருமில்லை. தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் தமிழ்ச்சான்றோர்களுக்கு திருவள்ளுவர் பெயரில் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அதே போன்று, திருக்குறளை தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் இயற்றப்பட்டது, திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** ஆட்சிக்காலத்தில்தான் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

பழம்பெரும் இலக்கிய இலக்கண வாழ்க்கை நெறிமுறைகளுக்குச் சொந்தக்கார இனம் நம் தமிழினம். அந்த வகையிலே பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான மதிப்புறு மாணிக்கமாய் நமக்குக் கிடைத்த அறிவுப் பெட்டகம் தான் திருக்குறள்.

உலகப் பொதுமறையாய் விளங்கிக் கொண்டிருக்கும் திருக்குறள் தெய்வப்புலவன் திருவள்ளுவரால் படைக்கப்பட்டது எனச் சொல்லும்போது ஒவ்வொரு தமிழனையும் நெஞ்சை நிமிர்த்தி பெருமிதம் கொள்ளச் செய்கின்றது.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாடினார் மகாகவி பாரதியார்.

பிள்ளையின் பசியறிந்து தாய் நினைந்து பாலூட்டுவது போல்,
தமிழ் வளர்ச்சிக்காகவும்
தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும்
அல்லும் பகலும் அயராது உழைத்து
எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி
அதைச் செயல்வடிவமாக ஆக்கி
சாதனை படைத்துக் கொண்டிருப்பவர்தான்
உலகத் தமிழினத்தின் ஒரே ஒப்பற்ற தலைவர்
**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆவார்.

**''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்''**

என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

அந்த வகையிலே சொல்லாமலேயே பல அரிய திட்டங்களைத் தமிழுக்காகச் செய்பவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் பிறந்த திரு. தருண் விஜய்.,எம்.பி., அவர்கள், திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் தனிப்பற்றுக்கொண்டு இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் சக்தி திருக்குறளில் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி வருகிறார்.

கன்னியாகுமரியிலிருந்து ஹரித்துவாருக்கு திருவள்ளுவர் சிலையினை திரு.தருண் விஜய் அவர்கள் தலைமையில் பேரணியாக எடுத்துச்சென்று, கங்கை நதிக்கரையோரம் வான்புகழ் திருவள்ளுவரின் சிலையினை நிறுவிடும் இந்த முயற்சி திருவள்ளுவரின் புகழும், திருக்குறளின் அருமையும், தமிழர்களின் பெருமையும் இந்திய மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும் என்றால் அதுமிகையாகாது.

தனிச்சிறப்பிற்குரிய இந்நிகழ்வு பெரு வெற்றியடைய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களது நல்லாசிகளுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

இந்த இனிய விழாவில் மாண்புமிகு மத்திய சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு. பொன் ராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு இந்து, சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் திரு. கோபால கிருஷ்ண காந்தி அவர்கள், திரு. தருண் விஜய், எம்.பி., அவர்கள், சுவாமி விமுர்தானந்தஜீ மகராஜ் அவர்கள் மற்றும் பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள், பள்ளி/கல்லூரி மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**